3

**Minutes of the Public Hearing Meeting held on 27.04.2023 at 11.00 A.M. at M/s.Raaj Mahal, Trichy – Chennai National Highway, Near by Weekly Market, Padalur Village, Alathur Taluk, Perambalur District – 621 109**

**Name of the Project:** **M/s.M.Baskaran for the Proposed Rough Stone Quarry lease over an extent of 2.13.0 Ha at S.F.Nos.4/3A,4/4B,7/4A & 7/4B in Padalur (East) Village, Alathur Taluk, Perambalur District.**

**List of Officials participated in the meeting:**

1. **Thiru. S.Sathiyabala Gangadharan,**
   Revenue Divisional Officer(a/c),
   Perambalur Revenue Division,
   Perambalur District.

2. **Dr.M.Senthil Kumar, M.E., Ph.D.,**
   District Environmental Engineer,
   Tamilnadu Pollution Control Board,
   Ariyalur District.

3. **Thiru. G.Elangovan,**
   Assistant Geologist,
   Department of Geology and Mining,
   Perambalur District.

4. **Thiru.N.Muthukumaran,**
   Tahsildar,
   Alathur Taluk,
   Perambalur District.

**List of Participants related to the project:**

1. **Thiru.M.Baskaran,**
   Proprietor,
   M/s.M.Baskaran Rough Stone Quarry,

2. **Thiru. Kannan,**
   General Manager,
   M/s.M.Baskaran Rough Stone Quarry,

3. **Thiru. Gopinath,**
   Environmental Consultant.

**List of Participants including Government Officers, Project Proponent and general public is enclosed vide Annexure - A.**

The District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Ariyalur District has welcomed the Revenue Divisional Officer, Tahsildar, Assistant Geologist, Public, Farmers Association Representatives, Environmental Activists, Govt. Officials. Police Officials and Project Proponent M/s.M.Baskaran Rough Stone Quarry for the Public Hearing Meeting on behalf of District Administration and Tamil Nadu Pollution Control Board.

The DEE, TNPCB, Ariyalur has informed that, to obtain Environmental Clearance from the Ministry of Environment, Forests & Climate Change, for the Scheduled Activities/Industries as per EIA Notification dated 14.09.2006, public opinion has to be obtained before the issue of Environment Clearance. He also informed that the views of public will be recorded and it will be forwarded to the State Environment Impact Assessment Authority as routine procedure.

The DEE, TNPCB, Ariyalur has informed that M/s.M.Baskaran Rough Stone Quarry has applied for EC for lease over an extent of 2.13.0 Ha at S.F.Nos.4/3A,4/4B,7/4A & 7/4B in Padalur (East) Village, Alathur Taluk, Perambalur District and accordingly this public hearing is being conducted.

The DEE, TNPCB, Ariyalur also informed that the Public Advertisements regarding the Public Hearing were published on 22.03.2023 through 'Daily Thanthi' and 'The Times of India' Newspapers.

The District Environmental Engineer has informed that the representative of the project proponent will explain the project, impact and environmental management plan of the Project through a Power Point Presentation. After that, the Public, Environmental Activists, Farmers Association Representatives can give their opinion orally or by written submission also. He also informed that the views of public will be Audio/Video recorded and the meeting Proceedings and Audio /Video CD will be forwarded to the State Environment Impact Assessment Authority. He requested the Revenue Divisional Officer to preside the Meeting. Also, he asked M/s.M.Baskaran Rough Stone Quarry representative to give the presentation.

The Revenue Divisional Officer, Perambalur Revenue Division has greeted everyone present and informed that today public hearing is arranged for getting the opinion of the public for the establishment of M/s.M.Baskaran Rough Stone Quarry over an extent of 2.13.0 Ha in S.F.Nos.4/3A,4/4B,7/4A & 7/4B, Padalur (East) Village, Alathur Taluk, Perambalur District.

Thiru.Gopinath, Environmental Consultant welcomed all and presented the Project details, impacts and EMP measures proposed through a Power Point presentation. He also informed that the Draft EIA and summary EIA Reports of the projects are also available in the Website of the Tamil Nadu Pollution Control Board. He also requested the public to record their views.

The District Environmental Engineer informed the public participated in the public hearing to offer their opinion about the project after informing the name and village of the individual.

5

1. **Mr. Manikandan, Thiruvalakurichi**

The Quarry significantly causes ill effects to our village and also affects the agricultural land and reduction of water level in the lakes located in our village. Due to a lack of rain for a month, we have water shortage. Further, no prior information was given to our village people regarding the public hearing meeting and I entered myself here only after seeing the notice board installed on the road. This public hearing meeting should takes place only in Thiruvalakurichi Village.

2. **Mr. Sivakumar, Thiruvalakurichi**

Without prior information to our village people, the public hearing is being conducted. The proposed quarry may cause huge damage to the environment. As per the rule, Quarry should planted minimum of 450 trees, but in actual no trees were found. The project proponent should take rough stones upto a depth of 30 meters, but 4000 feet depth of rough stone has been taken by the quarry persons. The project proponent has not mentioned about the presence of well and lake located nearby our village. Also, in power point Presentation, the project proponent has not mentioned the Thiruvalakurichi village. We are carried out agricultural activity only for four months out of the year because of the quarry's intense dust. Instead of transporting 1 unit of rough stone each day, Lorries and trucks have been moving with 6 to 10 units per day. In earlier days, only 50 units of rough stone were taken each day, but nowadays, up to 1000 units of rough stone were taken. Despite the announcement regarding the house tax, the residents of our village were not informed about the conductance of the public hearing. The presence of a quarry and a crusher in the same premises causes huge reduction in groundwater levels and also it creates dust pollution. There were no trees planted close to the quarry premises. There are no name boards installed in the quarry site. We, also feel that, there is no use of giving petitions to the District Collector, because no actions were taken in this regard. Also, the project proponent is taking more stones than the allowed quantity but Public & no officers are taking accountability for this.

3. **Thiru. Sasikumar, Thiruvalakurichi**

Many residents of our village were unaware of this meeting, and I am a newcomer to this public hearing as well. Only after seeing the notice on the road, I entered myself here. I have no issues to establish this quarry, provided that it should operate within the permitted quantity of rough stone. They only displayed the satellite image of the quarry; however, the officials ought to visit the quarry in person. Water is severely scarce in our village. Without water, the wells dried up, severely harming agriculture as a result. Only a selected group of people benefit from the Quarry, but the residents of our village always bear the burden of this. Groundwater level has already

lowered more than 100 feet. This situation could become very problematic if it persists. Additionally, he stated that fewer individuals from Thiruvalakurichi village is attending this public hearing.

4. **Mr. Ilayaraja, Padalur**

Padalur is about to build a shoe manufacturing industry which covers upto 110 acres. Lot of Government Poromboke land available in and around the quarry premises. There are two lakes in this area, ie. Keelaeri and Melaeri. Through the Anna Rehabilation Plan, Rs.15,50,000 has been allocated for Keelaeri. Furthermore, the Central Government is about to allocate funds for Maeleri. People who living within 300 metres or more from the quarry were given free housing pattas and they are facing serious issues at the time of explosion of rough stone. We request you to take care while doing explosive activity. Atleast, 2000 trees should be planted in and around the quarry premises. Water has been dried completely in two wells located in our area. Dust accumulation is high on soil and water sprinkling also does not reduce the dust emission. Basic facilities and Road facilities should be made to the village people. The quarry should provide water to our village and the project proponent should grant 25% fund to the village people for water facilities.

5. **Mr.Shiva, Perumalpalayam**

Our village does not have a source of drinking water. Due to the quarry's depth being deeper than the well's depth, there is no water in the well. The water supply is not sufficient at least one day in a week. Our village does not have basic facilities. He also informed that there is no funding allotted for the construction of a well.

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Ariyalur District has informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through video graphy / Audio and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 1 No of petition was received during the public hearing meeting on the proposed M/s. M.Baskaran Rough Stone Quarry project is enclosed herewith.

Further, no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Ariyalur District. It is also informed that there is no E-mail received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Ariyalur District from the public about the views/comments/complaints on the proposed M/s. M.Baskaran Rough Stone Quarry project.

7

List of publics attended the public hearing meeting along with photographs, Pen Drive recorded with the Audio/ Video of entire proceedings of public hearing are enclosed herewith.

04/5/2023

**Convener,**
**Public Hearing Meeting/**
**District Environment Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Ariyalur.**

4/5/23

**President ,**
**Public Hearing Meeting/**
**Revenue Divisional Officer(a/c),**
**Sub-Divisional Magistrate,**
**Perambalur Revenue Division,**
**Perambalur District.**

04/05/2023

9

**27.04.2023 காலை 11:00 மணியளவில், தி/ள்.ராஜ் மஹால், திருச்சி – சென்னை தேசிய நெடுஞ்சாலை, வார சந்தை அருகில், பாடாலூர் கிராமம், ஆலத்தூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தின் அறிக்கை**

---

**திட்டம் : தி/ள்.M.பாஸ்கரன் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி விஸ்தீரணம் - 2.13.0 ஹெக்டேர், புல எண். 4/3A,4/4B, 7/4A & 7/4B, பாடலூர் கிழக்கு கிராமம், ஆலத்தூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்.**

---

**இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அலுவலர்கள் :**

1. **திரு.சு.சத்தியபால கங்காதரன்,**
   வருவாய் கோட்டாட்சியர்(கூ/பொ),
   பெரம்பலூர் வருவாய் கோட்டம்,
   பெரம்பலூர் மாவட்டம்.
2. **முனைவர்.M.செந்தில் குமார்,M.E., Ph.D**
   மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   அரியலூர் மாவட்டம்.
3. **திரு.G. இளங்கோவன்,**
   உதவி புவியியலாளர்,
   புவியியல் மற்றும் சுரங்கத்துறை,
   பெரம்பலூர் மாவட்டம்.
4. **திரு.ந.முத்துக்குமரன்,**
   வட்டாட்சியர்,
   ஆலத்தூர் வட்டம்,
   பெரம்பலூர் மாவட்டம்.

**திட்டம் சம்பந்தப்பட்ட பங்கேற்பாளர்கள் :**

1. **திரு. M.பாஸ்கரன்,**
   உரிமையாளர்,
   தி/ள்.M.பாஸ்கரன் ரப் ஸ்டோன் குவாரி.
2. **திரு. கண்ணன்,**
   பொது மேலாளர்,
   தி/ள்.M.பாஸ்கரன் ரப் ஸ்டோன் குவாரி.
3. **திரு. கோபிநாத்,**
   சுற்றுச்சூழல் ஆலோசகர்.

**கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்துகொண்ட அரசு அலுவலர்கள், நிறுவனத்தினர் மற்றும் பொதுமக்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், பொதுமக்கள் கருத்துக் கேட்புகூட்டத்திற்கு வருகைபுரிந்த வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர், உதவி புவியியலாளர், பொதுமக்கள், விவசாய சங்கபிரதிநிதிகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் திட்டமுனைவோர் M.பாஸ்கரன் ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தினர் உள்ளிட்ட

அனைவரையும் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக வரவேற்றார்.

மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக 14.09.2006 அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின், பட்டியலில் குறிப்பிட்டுள்ள தொழிற்சாலை திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு முன் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் அவசியமாகிறது என்றார். பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு, மத்திய அல்லது மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பிவைப்பது நடைமுறை என்றார்.

தி/ள்.M.பாஸ்கரன் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தினர், பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், பாடலூர் கிழக்கு கிராமத்தில் 2.13.0 ஹெக்டேர் பரப்பளவில் கல் குவாரி அமைக்க சுற்றுச்சூழல் அனுமதி பெற விண்ணப்பித்துள்ளது என்றார். சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு முன் திட்டம் குறித்து பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டுப் பெறுவதற்காக இந்த கருத்துக் கேட்புக்கூட்டம் நடைபெறுகிறது என்றார்.

மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் பொது அறிவிப்பு 30 நாட்களுக்கு முன்பாக 22.03.2023 தேதியிட்ட தினத்தந்தி மற்றும் தி டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்ததைக் குறிப்பிட்டார்.

தி/ள்.M.பாஸ்கரன் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தினர் கல் குவாரி திட்டம் தொடர்பாகவும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி காட்சி (Power point) வாயிலாக விளக்குவார்கள் என்றார். அதன்பின், பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், விவசாய சங்கபிரதிநிதிகள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாக தெரிவிக்கலாம் அல்லது மனுவாகவும் அளிக்கலாம் என்றார். அவ்வாறு தெரிவிக்கும் கருத்துக்கள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, கூட்ட நடவடிக்கையின் கருத்துரைகள் மற்றும் பதிவு செய்த ஒலி / ஒளி குறுந்தகடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொண்டார். மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர் அவர்களை இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்தித் தருமாறு கேட்டுக் கொண்டார். மேலும், தி/ள்.M.பாஸ்கரன் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தினரை இத்திட்டம் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கோரினார். .

வருவாய் கோட்டாட்சியர், பெரம்பலூர் மாவட்டம் அவர்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்றார். மேலும், இன்றைய கருத்து கேட்பு கூட்டமானது உத்தேசிக்கப்பட்டுள்ள கல்குவாரி திட்டமான தி/ள்.M.பாஸ்கரன் ரப் ஸ்டோன் குவாரி பற்றியது. நிறுவனத்தினர் இத்திட்டத்தைப் பற்றி விரிவாக எடுத்துரைப்பார்கள் என்றும், அதன் பின்னர் பொது மக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

திரு.கோபிநாத், சுற்றுச்சூழல் ஆலோசகர் அனைவரையும் வரவேற்று இத்திட்டம் தொடர்பாகவும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை/ மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி காட்சி (Power point) வாயிலாகத் தெரிவித்தார். மேலும், இத்திட்டத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வறிக்கைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இணையதளத்திலும் உள்ளதாகத் தெரிவித்தார்.

அதன்பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், பொதுமக்கள் திட்டம் தொடர்பான தங்களது கருத்துக்களை தங்களது பெயர் மற்றும் ஊர் பெயர் தெரிவித்த பின் பதிவிடுமாறு கேட்டுக் கொண்டார்.

**1. திரு.மணிகண்டன், திருவளக்குறிச்சி.**

குவாரியினால் எங்கள் ஊருக்கு அதிக பாதிப்பு ஏற்படுகிறது. மேலும் இக்குவாரியால் விவசாய நிலங்கள் பாதிப்பு ஏற்பட்டு ஏரிகளின் நீர்வரத்து குறைகிறது. இதனால் குவாரிக்கு அனுமதி வழங்குவதை எதிர்ப்பு தெரிவிக்கிறேன். ஒரு மாத காலமாக மழை இல்லாததால் சுத்தமாக தண்ணீர் இல்லை. பொதுமக்களுக்கு முறையாக கருத்து கேட்புக்கூட்டம் பற்றிய தகவல் தெரிவிக்கவில்லை. சாலையோரம் இருந்த அறிவிப்பு பலகையை பார்த்துதான் உள்ளே வந்தேன். மேலும், இந்த கருத்து கேட்பு கூட்டத்தை திருவளக்குறிச்சியில் நடத்தியிருக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

**2. திரு.சிவக்குமார், திருவளக்குறிச்சி.**

இந்த கூட்டத்தை கிராமப்புற மக்களுக்கு தெரியப்படுத்தாமலே நடத்தி கொண்டு இருக்கிறார்கள். சம்மந்தப்பட்ட மக்களிடம் முறையாக தெரிவிக்கவில்லை. இக்குவாரி அமைவதால் சுற்றுச்சூழல் பாதிப்பு அதிகமாக உள்ளது. குவாரியினை சுற்றி 450 மரங்கள் நடவேண்டும் ஆனால் அங்கு அவ்வாறு இல்லை. குவாரிக்கு 30 மீட்டர் ஆழம் மட்டுமே எடுக்க வேண்டும் என்பதே விதி. ஆனால் குவாரியானது 4000 அடிக்கு மேல் தோண்டப்பட்டுள்ளது. மேலும் குவாரிக்கு அருகாமையில் இருக்கும் கிணறு மற்றும் ஏரி இருப்பதையும் தெரியப்படுத்தவில்லை. காணொளி காட்சி (Power point) வாயிலாக திட்டத்தை விவரிக்கும் போது திருவளக்குறிச்சி என்ற கிராமத்தை எதிலும் குறிப்பிடவில்லை. காரை மற்றும் செட்டிக்குளத்தில் அமைந்துள்ள ஏரியை பற்றி குறிப்பிடுகின்றனர் ஆனால், திருவளக்குறிச்சி ஏரியை எங்கும் குறிப்பிடவில்லை. மேலும், இக்குவாரியால் தூசு பரவுவதால், 1 வருவடத்தில் 4 மாதங்கள் மட்டுமே பயிரிடுவதாக தெரிவித்தார். அதுமட்டுமின்றி லாரியில் 1 யூனிட் கல் மட்டுமே ஏற்ற வேண்டிய இடத்தில் 6 முதல் 10 யூனிட் வரை கற்கள் ஏற்றி செல்லப்படுகின்றன. முன்னதாக ஒரு நாளைக்கு 50 யூனிட் கல் எடுத்தார்கள் ஆனால் தற்பொழுது 1000 யூனிட்டிற்கு மேல் எடுக்கிறார்கள். நேற்று வீட்டு வரி செலுத்தவேண்டி எங்கள் ஊரில் அறிவித்தபோதும் இக்கூட்டம் நடப்பதை பற்றி எந்த அறிவிப்பும் தெரிவிக்கவில்லை. குவாரி மற்றும் கிரஷர் அருகருகே அமைந்துள்ளதால் நிலத்தடி நீர் பாதிப்பு ஏற்படுகிறது. தூசி அதிகமாக வருகிறது. குவாரியை சுற்றி எந்தவொரு அறிவிப்பு பலகையும் வைக்கப்படவில்லை. குவாரியைச்சுற்றி மரம் அமைக்கப்படவில்லை. குவாரி ஆட்களுக்கு எதைப்பற்றியும் கவலையில்லை. விவசாய நிலமும் விவசாயிகளின் வாழ்வாதாரம் பற்றியும் கவலையில்லை. பலமுறை மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தும் பலன் இல்லை. மேலும், ஐந்து வருடத்திற்கு எவ்வளவு கல்

எடுக்க வேண்டும் என அளவு இருக்கிறது. ஆனால் அதை தாண்டி பல மடங்கு கல் எடுக்கிறார்கள். இதனை எந்தஒரு பொதுமக்களும் அதிகாரிகளும் கண்டுக்கொள்வதில்லை என தெரிவித்தார்.

3. **திரு.சசிக்குமார், திருவளக்குறிச்சி.**

நான் முதல் முறையாக இந்த கூட்டத்திற்கு வருகிறேன். மக்களுக்கு இக்கூட்டம் பற்றிய முறையான விழிப்புணர்வு இல்லை. நானும் அறிவிப்பு பலகையை பார்த்த பின்னர்தான் இக்கூட்டத்திற்கு வந்துள்ளேன். கல்குவாரி அமைப்பதில் பிரச்சனை இல்லை. ஆனால் அனுமதிக்கப்பட்ட அளவில் எடுக்க வேண்டும். காணொளி வாயிலாக குவாரியின் Satellite Image காட்டினார்கள். குவாரியை நேரடியாக சென்று பார்வையிட்டால்தான் தெரியும் எனென்றால் இங்கு சொல்வது ஒன்று ஆனால் அங்கு வேறுமாதிரியாக இருக்கிறது. எங்களுடைய மிகப்பெரிய பிரச்சனை எங்கள் ஊரில் தண்ணீர் இல்லை. கிணற்றில் தண்ணீர் வற்றிவிட்டது. இதனால் விவசாயம் மிகுந்த பாதிப்பு அடைகிறது. இந்த குவாரியின் மூலம் சம்பாரிப்பது வேறு ஆட்கள் ஆனால் இதில் பாதிக்கப்படுவது முழுவதும் எங்கள் ஊர் மக்கள். 100 அடிக்கு மேல் நிலத்தடி நீர் மட்டம் சென்றுவிட்டது. இப்படியே சென்றால் எங்கள் ஊரில் 10 வருடத்திற்கு பிறகு எதுவும் இருக்காது. ஏற்கனவே எடுத்த கல்லிற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை இதற்கிடையில் புதிதாக கல் எடுக்க அனுமதி கொடுத்தால் என்ன செய்வது என தெரிவித்தார். மேலும், திருவளக்குறிச்சியிலிருந்து குறைவான ஆட்களே வந்து இருக்கிறார்கள். எங்கள் ஊர் மக்கள் இல்லாமல் வெளியூர் மக்களை வைத்து கூட்டம் நடத்துகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

4. **திரு.இளையராஜா, பாடாலூர்.**

பாடாலூரில் 110 ஏக்கரில் செருப்பு தைக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட உள்ளது. குவாரியின் சுற்று வட்டாரத்தில் நிறைய அரசு புறம்போக்கு நிலம் உள்ளது. இங்கு கீழேரி மற்றும் மேலேரி என்ற இரு ஏரிகள் உள்ளது. கீழேரிக்கு அண்ணா மறுமலர்ச்சி திட்டம் மூலம் 15,50,000 ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலேரியை சீரமைப்பதற்காக மத்திய அரசு திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டு சரிசெய்யப்பட உள்ளது. குவாரியிலிருந்து 300 மீட்டர் தொலைவில் இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது. எனவே, கல்குவாரியில் வெடிவைப்பதால் வீடுகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் பூமி அதிராமலும் பாதுகாப்பாகவும் தகுந்த முறையில் வெடி வைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். அதிக மரங்களை வளர்க்க வேண்டும் மற்றும் குறைந்தது 2000 மரங்களாவது வளர்க்க வேண்டும். இரண்டு கிணறுகளில் தண்ணீர் வற்றி விட்டது என தெரிவித்தார். மண் தரையில் புழுதி அதிகமாக உள்ளதாகவும் தண்ணீர் ஊற்றியும் புழுதி குறையவில்லை என தெரிவித்தார். மேலும் அருகிலுள்ள கிராமங்களுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் சாலை வசதிகள் செய்துதர வேண்டும். எங்கள் கிராமத்திற்கு தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. எனவே, 25% நிதி உதவியை குவாரி உரிமையாளர்கள் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

13

5. திரு.சிவா, பெருமாள்பாளையம்.

எங்கள் ஊரில் குடிநீர் ஆதாரம் இல்லை. கிணற்றின் ஆழத்தை விட குவாரியின் ஆழம் அதிகமாக இருப்பதால் கிணற்றிலும் தண்ணீர் இல்லை. வாரத்திற்கு ஒரு நாள் கூட குடிநீர் பத்தவில்லை. எங்கள் ஊருக்கு எந்த வித அடிப்படை தேவைகளையும் பூர்த்தி செய்யவில்லை. ஒரு கிணறு அமைப்பதற்கு கூட நிதி வழங்கவில்லை.

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், அரியலூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவு பெற்றதாக தெரிவித்தார்.

மேலும், தி/ள்.M.பாஸ்கரன் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி பாடாலூரில் அமைப்பது தொடர்பாக பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட ஒரு மனு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தி/ள்.M.பாஸ்கரன் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி பாடாலூரில் அமைப்பது தொடர்பாக எழுத்து மூலமாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், அரியலூரில் எந்த வித மனுக்களும் பெறப்படவில்லை. மின்னஞ்சல் மூலமாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், அரியலூர் அலுவலகத்தில் எந்த வித மனுக்களும் பெறப்படவில்லை என்பது தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்கூறிய பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல், கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி மற்றும் ஒலி தொகுப்புகள் அடங்கிய பதிவுகோல் ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

04/5/2023

அமைப்பாளர்,
பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம்/
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
அரியலூர்

04/05/2023

4/5/23

தலைவர்,
பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம்/
வருவாய் கோட்டாட்சியர்(கூ/பொ)
மற்றும் உட்கோட்ட நடுவர்,
பெரம்பலூர் வருவாய் கோட்டம்,
பெரம்பலூர் மாவட்டம்.